TNMD010004112025



**நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு,S.ஜான் சுந்தர்லால் சுரேஷ் , B.Sc.,M.L.,
நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ம் நாள் புதன்கிழமை

அமர்வு வழக்கு எண்.55/2025

CNR No.TNMD01–000411–2025

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர், கள்ளிக்குடி காவல் நிலைய குற்ற எண்.91/2017 |
| குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர் | : | பாண்டி, (33/2017)<br>த/பெ கருப்பையா |
| எதிரியின் மீது வனையப் பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| தீர்ப்பும் தண்டனையும் | : | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>மேலும் எதிரி வழங்கிய பிணைப் பத்திரத்தை ரத்து செய்து உத்திரவிடப் படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக இன்று 15.04.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.J. ஜவஹர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.V.சிவா வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்பு.

<u>வழக்கு சுருக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் எதிரி பாண்டி 05.04.2017 முதல் 13.04.2017 வரை = 9 நாட்கள்<br><br>வழக்கு விசாரணையின் போது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாததால், எதிரி மீது கடந்த 28.08.2025ம் தேதி பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு, அதனை நிறைவேற்றும் பொருட்டு, எதிரி கடந்த 12.01.2026 ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, 23.01.2026ம் தேதி வரை 12 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார்.<br><br>மீண்டும் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் கடந்த 23.02.2026ம் தேதி பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில், எதிரி கடந்த 16.03.2026ம் தேதி இந்நீதிமன்றத்தில் சரணடைந்து மேற்படி பிடிகட்டளையை திரும்ப பெறக்கோரி Crl.M.P.No.463/26 மனு தாக்கல் செய்து, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேற்படி மனு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அன்றைய தேதியிலேயே தள்ளுபடி செய்யப்பட்டு, எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, 16.03.2026ம் தேதி முதல் 30.03.2026ம் தேதி வரை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார்.<br><br>மொத்தம் 36 நாட்கள் | | |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 08.10.2024 | | |
| 3. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 22.11.2024 | | |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 02.02.2026 | | |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| | | அ.சா.1 | 24.03.2026 | 24.03.2026 |
| | | அ.சா.2 | 24.03.2026 | இல்லை |
| | | அ.சா.3 | 24.03.2026 | இல்லை |
| | | அ.சா.4 | 24.03.2026 | இல்லை |
| | | அ.சா.5 | 09.04.2026 | 09.04.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரியிடம் | 15.04.2026 | | |

| | | |
|---|---|---|
| | கேள்வி கேட்கப்பட்ட நாள் | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை |

**தீர்ப்புரை**

2. அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 04.04.2017ம் தேதி சுமார் 11.00 மணியளவில் சாட்சி எண்.1 முதல் சாட்சி எண்.3 வரை உள்ளவர்கள் வாதியின் கடையில் வேலை பார்த்துகொண்டிருந்த போது வாதியின் கடைக்கு வந்து சாட்சி எண்.2 ஐ எதிரி அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் ஒக்காள ஒளி தேவெடியா மகனே என அசிங்கமாக பேசி கொலை செய்துவிடுவேன் என்று சாட்சி எண்.1 ஐ மிரட்டி சாட்சி எண்.1 க்கு சொந்தமான TN 67AP 7643 Dosth என்ற நான்கு சக்கர வாகனத்தின் முன்பு பக்க கண்ணாடியை உடைத்து சேதம் ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(i) உ/இ 3(1) TNPPDL Act–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் விளைவித்ததாக கள்ளிக்குடி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கினை நீதித்துறை நடுவர், திருமங்கலம் அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.71/2024 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி வழங்கப்பட வேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.55/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

4. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால், 02.02.2026ம் தேதி எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) of TNPPDL Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றவாளி இல்லை என்று குற்றத்தை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அரசுதரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணைங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

இந்த வழக்கின் அ.சா.5 சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் கடந்த 04.04.2017ம் தேதி கள்ளிக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது, 12.45 மணிக்கு அ.சா.1 பிரபாகரன் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.2 புகாரைப்பெற்று, காவல் நிலைய குற்ற எண்.91/2017, இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Actன் படி வழக்கு பதிவு செய்து, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரையும் திருமங்கலம், நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட நகலை மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கை காவல் ஆய்வாளர் சாட்சி எண்.8 திரு.ரவி அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகளான சாட்சி எண்.5 ஜேம்ஸ், சாட்சி எண்.6 சிதம்பரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள், சாட்சி எண்.5 மற்றும் சாட்சி எண்.6 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து இந்த வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்வி கேட்க எதிரி பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9 . பிரச்சனை** :

அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 04.04.2017ம் தேதி சுமார் 11.00 மணியளவில் சாட்சி எண்.1 முதல் சாட்சி எண்.3 வரை உள்ளவர்கள் வாதியின் கடையில் வேலை பார்த்துகொண்டிருந்த போது வாதியின் கடைக்கு வந்து சாட்சி எண்.2 ஐ எதிரி அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் ஒக்காள ஒளி தேவெடியா மகனே என அசிங்கமாக பேசி கொலை செய்துவிடுவேன் என்று சாட்சி எண்.1 ஐ மிரட்டி சாட்சி எண்.1 க்கு சொந்தமான TN 67AP 7643 Dosth என்ற நான்கு சக்கர வாகனத்தின் முன்பு பக்க கண்ணாடியை உடைத்து சேதம் ஏற்படுத்தியுள்ளார் என்பதாகும்.

10. அரசு தரப்பு அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் இந்த வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 பிரபாகரன் கடந்த 04.04.2017ம் தேதி 12.45 மணிக்கு கொடுத்த அ.சா.ஆ.2 புகாரின் அடிப்படையில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிரி மீதான குற்றசாட்டுகளானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11. எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.1 பிரபாகரன் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பது மட்டுமின்றி எதிரி தாக்கியதாக சொல்லப்படும் அ.சா.2 மாரீஸ்வரன் எதிரி தன்னை அசிங்கமாக பேசி தாக்கியதாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இந்த வழக்கு சம்பவ சாட்சிகளான அ.சா.3 பகவத்சிங் மற்றும் அ.சா.4 முருகன் ஆகியோர் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இந்நிலையில் அ.சா.5 திரு.ராஜேந்திரன் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டது சம்மந்தமாக சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்தோடு இணைப்பதற்கு ஏற்றுகொள்வதற்கான சாட்சியங்கள் இந்த வழக்கில் அமையாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

12. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது கடந்த 04.04.2017ம் தேதி சுமார் 11.00 மணியளவில் சாட்சி எண்.1 முதல் சாட்சி எண்.3 வரை உள்ளவர்கள் வாதியின் கடையில் வேலை பார்த்துகொண்டிருந்த போது எதிரி வாதியின் கடைக்கு வந்து சாட்சி எண்.2 ஐ அசிங்கமாக பேசி கொலை செய்துவிடுவேன் என்று சாட்சி எண்.1 ஐ மிரட்டி சாட்சி எண்.1 க்கு சொந்த TN 67AP 7643 Dosth என்ற நான்கு சக்கர வாகனத்தின் முன்பு பக்க கண்ணாடியை உடைத்தார் என்பதாகும். இந்த வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.1.பிரபாகரன் தன்னுடைய முதல் விசாரணையில், எதிரி கம்பால் நான்கு சக்கர லோடு வண்டியின் முன் பக்க கண்ணாடியை உடைத்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், போலீஸ் விசாரணையில் தன்னுடைய குவிமுச 161(3) வாக்குமூலத்தில் எதிரி பதிவெண் TN 67 AP 7643 கொண்ட தோஸ்த் வாகனத்தின் முன் புறக் கண்ணாடியை கல்லால் அடித்து உடைத்துவிட்டதாக முரண்பட்டு சாட்சிம் அளித்துள்ளார் என்பது மட்டுமின்றி, இந்த நீதிமன்றத்தில் வழக்கு சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும் தன்னுடைய முதல் விசாரணையில் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.1 பிரபாகரன் என்ற சாட்சியத்திற்கு இந்த வழக்கில் எந்த முக்கியத்துவமும் கொடுக்க இயலாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13. மேலும் எதிரி தாக்கியதாக சொல்லப்படும் அ.சா.2 மாரீஸ்வரன் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம்அளிக்கவில்லை என்பது மட்டுமின்றி இந்த வழக்கில் சம்பவ சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 பகவத்சிங் மற்றும் அ.சா.4 முருகன் ஆகியோர்கள் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பது மட்டுமின்றி, எதிரி ஒன்றும் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.5 திரு.ராஜேந்திரன் இந்த வழக்கில் புலன்விசாரணை மேற்கொண்டது சம்மந்தமாக சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்துடன் இணைப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த சாட்சியங்களும் இந்த வழக்கில் அமையாததால் எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர்களை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 3(1) TNPPDL Act–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் எதிரி வழங்கிய பிணைப் பத்திரத்தை ரத்து செய்து உத்திரவிடப் படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH
Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.15 17:19:36 +0530

4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பிரபாகரன் |
| அ.சா.2 | திரு.மாரீஸ்வரன் |
| அ.சா.3 | திரு.பகவத்சிங் |
| அ.சா.4 | திரு.முருகன் |
| அ.சா.5 | திரு.ராஜேந்திரன், சார்பு ஆய்வாளர், கள்ளிக்குடி காவல் நிலையம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.04.2017 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 04.04.2017 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 04.04.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 04.04.2017 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 04.04.2017 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :** இல்லை

JOHN SUNDARLAL SURESH
Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.15 17:19:45 +0530

4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை